# Tamil Murli Quiz 01-12-2015

தமிழ் முரளி வினாடி-வினா
முரளியினை மறுமுறை நினைவுற உதவும் வினாடி-வினா. இன்றைய முரளியிலிருந்தே கேள்விகள் கேட்கப்படும்.
இங்கே கிளிக் செய்க: 20 நிமிட முரளியின் எம்பி3 கோப்புகள் மற்றும் பழைய வினாடி-வினா.abc

**Q.1)** <u>சரியான விடை கொண்டு வாக்கியத்தை முடிக்கவும்:</u>
**உங்களுடைய துக்கத்தின் நாட்கள் முடிந்து விட்டன. நீங்கள் இப்பொழுது ____________________ எந்த ஒரு பொருளும் இல்லாத உலகத்திற்கு சென்று கொண்டிருக்கிறீர்கள்.**

A. துக்கம் கொடுக்கக்கூடிய
B. விஷ ஜந்துக்கள் போன்ற
C. அடையப்பெறாத
D. இராவணனின்

**Q.2)** <u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>
**எந்த இரண்டு வார்த்தைகளின் இரகசியம் உங்கள் புத்தியில் இருப்பதால் பழைய உலகத்தின் மீது எல்லை இல்லாத வைராக்கியம் இருக்கிறது?**

A. இறங்கும் கலை மற்றும் ஏறும் கலை
B. சுகம் மற்றும் துக்கம்
C. சாந்தி மற்றும் அசாந்தி
D. நற்குணம் மற்றும் அவகுணம்

**Q.3)** <u>சரியா? தவறா?:</u>
**என்னுடைய குழந்தைகளாகிய நீங்கள் பயங்கரமான நரகத்திலிருந்து வெளியேறி சொர்கத்திற்கு சென்று கொண்டிருக்கிறீர்கள். சத்யுகம், திரேதா, துவாபரயுகம் கடந்து போய் விட்டது. கலியுகம் மட்டும் இன்னும் கொஞ்சம் பாக்கி உள்ளது உங்களைப்பொருத்த வரையில்.**

A. சரி
B. தவறு

**Q.4)** <u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>
**ஹே ஆத்மா ! ________________________ என்று தந்தை ஆன்மீக குழந்தைகளுக்குக் கூறுகின்றார்.**

A. பொறுமையாக இருப்பாய்
B. அமைதி உன்னுடைய சுய தர்மம்
C. என்னை நினைவு செய்தால் ஆத்மாவில் உள்ள அழுக்கு நீங்கும்
D. பாவனம் ஆகாமல் பாவன உலகத்திற்கு செல்ல முடியாது.

**Q.5)** <u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>
**ஆத்மா சதோபிரதான மாக ஆகிவிடும் பொழுது ____________________ விட்டு விடும்.**

A. இந்த பழைய உலகத்தின் மீதுள்ள பற்றை
B. முயற்சி செய்வதை
C. இந்த சரீரத்தை
D. பணம், பதவி, பொருட்கள் முதலியவற்றின் மேல் உள்ள ஆசையை

**Q.6)** <u>சரியா? தவறா? :</u>
**இந்திர சபைக்கு சூத்திரர்களை கூட்டி வந்ததால் துர்நாற்றம் வீச ஆரம்பித்தது. பிறகு அவருக்கு சாபம் கொடுத்து விட்டார் என்ற கதை உள்ளது. இதன் உண்மையான பொருள் இந்த சபையில் எந்த ஒரு பதீதமானவர்களும் வர முடியாது என்பதாகும்.**

A. சரி
B. தவறு

*Q.7)* <u>**சரியான விடையை தேர்வு செய்யவும்:**</u>
**புது உலகத்தில் ஒரு இராஜ்யம், ஒரு மொழி இருந்தது . அதற்கு ___________________________ என்று கூறப்படுகிறது.**

**A.** துவைத இராஜ்யம்

**B.** அத்வைத இராஜ்யம்

**C.** சொர்க்கம்

**D.** தேவதைகளின் இராஜ்யம்

*Q.8)* <u>**சரியான விடை கொண்டு வாக்கியத்தை பூர்த்தி செய்யவும்:**</u>
**__________________ இறங்கும் கலையின் மார்க்கம் என்று கூறப்படுகிறது.**

**A.** விக்கிரகங்களின் பூஜை செய்வது

**B.** தீர்த்த யாத்திரை செய்வது

**C.** இராவண வழிக்கு

**D.** பக்தி செய்வது

*Q.9)* **சரியான விடையை தேர்ந்தெடுக்கவும் :**
**பெருந்தன்மையான உள்ளத்தின் விசேஷ தன்மை மூலமாக தனது குணங்களால் மற்றவர்களை குணவானாக ஆக்கக்கூடிய ______________________ ஆவீர்களாகுக.**

**A.** குண மூர்த்தி

**B.** விஷ்வ கல்யாணகாரி

**C.** பூஜைக்குரிய தேவதைகள்

**D.** ஆதார மூர்த்தி மற்றும் உத்தாரமூர்த்தி

*Q.10)* **சரியான விடையை தேர்ந்தெடுக்கவும் :**
**நீங்கள் மற்றும் தந்தை எவ்வாறு இணைந்திருக்க வேண்டும் என்று பாபா கூறுகிறார்?**

**A.** ஒருடல் ஈருயிர் போல

**B.** மூன்றாமவர் யாரும் பிரிக்க முடியாததாக

**C.** நகமும் சதையும் போல

**D.** ஆத்மாவும் உடலும் போல